# தமிழிலக்கியங்களில்...
# உணர்வெழுச்சி

## பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை

**1**


பதிப்பாசிரியர்

“சொல்லின் செல்வர்” “கலைமாமணி”

**ஆவடிக்குமார்**

தலைவர், அனைத்திந்திய தமிழ்ச்சங்கம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | | தமிழிலக்கியங்களில்... உணர்வெழுச்சி பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை |
| பதிப்பாசிரியர் | : | "சொல்லின் செல்வர்" "கலைமாமணி" ஆவடிக்குமார் |
| வெளியீடு | : | கழகமுரசு பதிப்பகம்<br>எண். 71. ஒன்பதாவது தெரு<br>காமராஜ் நகர். ஆவடி,<br>சென்னை - 600 071.<br>போன்: 9941274777 |
| முதற்பதிப்பு | : | மே 2021<br>தொகுப்பு - 1 |
| நூல் அளவு | : | கிரவுன் 1/4 |
| பக்கங்கள் | : | 532 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | ரூ. 600/- |
| அச்சாக்கம் | : | ஆவடிக்குமார் அச்சகம்<br>சென்னை - 600 071. |
| ISBN No. | : | 978-81-908685-3-2 |

62. ஆண்டாள் பக்தியும் காதல் உணர்வும்
**மு.கோகிலா**

63. வாலிப கவிஞர் வாலியின் கவிதைகளில் உணர்வெழுச்சிகள்
**ஜெ.கோமளா**

64. சித்தர்களின் சமூகச் சிந்தனைகள்
**மு. பழனியம்மாள்**

65. திருமூலர் காட்டும் அன்பு நெறி
**ம.தங்கராஜ்**

66. ஆற்றுப்படை வழி தமிழர்களின் விருந்தோம்பல் உணர்வு
**மு.சுப்புலெட்சுமி**

67. பட்டினத்தார்-துறவிலும் துறக்கா தாயன்பு
**முனைவர் ம.லெ.இராஜேஸ்வரி**

68. சங்க இலக்கியங்கள் காட்டும் 'கைவினைக் கலைஞர்கள்'
**சு.மாதுகண்ணன்**

69. யாக்கோமே கொன்சால்வேஸின் வியாகுல பிரசங்கத்தில் நாட்டார் இலக்கியத்தின் செல்வாக்கு
**மேரிவினிபிரிடா சுரேந்திரராஜ்**

70. மீனவர் அம்பாவில் கண்ணகியின் துன்ப உணர்வுகள்
**'மாமணிக்கவிஞர்' பேராசிரியர் கோ.மாசிலாமணி**

71. மணிமேகலையில் காதல் இன்பம்
**நா.மீனா**

72. புறநானூற்றில் போர் வெறுக்கும் பரணரின் உணர்வெழுச்சி
**செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு**

73. திருநங்கையரின் மெய்ப்பாடுகள்
**வெ.முனியாண்டி**

74. தமிழ் இலக்கியங்களில் ததும்பி கிடக்கும் தறுகண் (பெருமிதம்)
**மு.நாகராணி**

75. பாவேந்தர் பார்வையில் புரட்சிக்கவியின் உணர்வெழுச்சி
**முனைவர் வை.நம்பித்தாய்**

76. தமிழ் இலக்கியங்களில் காதல் உணர்வு
**பெ. தினேஷ்**

77. பெரியபுராணத்தில் பக்தி உணர்வு
**ப.சரஸ்வதி**

78. நீதி இலக்கியங்கள் காட்டும் கல்விச் சிந்தனைகள்
**பா. பாக்கியலட்சுமி**

79. பக்தி இலக்கியங்கள்
**ப.லதா**

80. புதுமைப்பித்தன் சிறுகதைகளில் பெண்ணிய உணர்வுகள்
**ப.மகாலெட்சுமி**

81. நாட்டுப்புற இலக்கியம்
**மு.க.பரமசிவம்**

# சித்தர்களின் சமூகச் சிந்தனைகள்

**திருமதி. மு. பழனியம்மாள்**
உதவிப் பேராசிரியர்
தாகூர் அரசு கலை-அறிவியல் கல்லூரி
புதுச்சேரி-605008.



**சித்தர்கள்-முன்னுரை**

சித்து எனும் சொல் தெளிந்த ஞானத்தைக் குறிக்கும். எனவே, ஞானம் பெற்றவர்களைச் சித்தர்கள் என்று கூறுவது பொருந்தும். சித்தர்கள் அறிவர்கள் என்று தமிழில் அழைக்கப்பெற்றனர். இதற்கான சான்று தொல்காப்பியத்திலேயே காணப்படுகிறது. இலக்கிய இலக்கணங்கள் இச் சித்தர்களை நிறைமொழி மாந்தர் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றன. அட்டமாசித்திகள் எனும் எண்வகைச் சித்திகள் கைவரப் பெற்றவர்களே சித்தர்கள் ஆவர். நிறைமொழி மாந்தர் என்றும் அறிவர் என்றும் செயற்கரியச் செய்வார் பெரியர் என்னும் பல்வேறு சிறப்புப் பெயர்களைப் பெற்றுள்ள சித்தர்களின் சமூகச் சிந்தனைகளை ஆராய இக்கட்டுரை விழைகிறது.

**சமய வேறுபாடுகளைக் களைதல்**

சமயங்கள் என்பவை மனிதரால் ஏற்படுத்தப்பட்டவை. அவரவர் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப சமயங்களை ஏற்படுத்திக் கொண்டனரே யன்றி, அவற்றில் பொருள் ஏதுமில்லை. இவற்றால் மக்களின் ஒற்றுமைக் குறைவும், சிக்கலுமே மிகுதி என்பதையுணர்ந்த சித்தர்கள், இவற்றை வெளிப்படையாகத் தாக்கிப் பாடியுள்ளனர்.

**சமயம் ஆறுமடி அகப்பேய்**

தம்மாலே வந்ததடி
அமைய நின்றவிடம் அகப்பேய்
ஆராய்ந்து சொல்வாயே -அகப்பேய் சித்தர் பா.எ. 22

என்று கூறுவார் அகப்பேய் சித்தர்.

சமயவாதிகளின் செருக்காலும், இழி செய்கையாலும் சேற்றிற் சேர்ந்த மலரும் சேறானது போல, தேவர்களும் தங்கள் சிறப்பை இழப்பர்.

# தமிழர் மாண்பு

(தேசிய ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரைகள்)




புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| • நூல் | : தமிழர் மாண்பு |
| • மொழி | : தமிழ் |
| • வகை | : கட்டுரை |
| • நூல் தொகுப்பு | : பாவலர் ஆறு. செல்வன் 9894755985 |
| • பதிப்பாசிரியர் | : முனைவர் ஆ. விஜயராணி |
| • துணைப்பதிப்பாசிரியர்கள் | : பேராசிரியர் கூ. கிருஷ்ணம்மாள்<br>முனைவர் அண்ணா. ஜெகன் |
| • முதல் பதிப்பு | : 25.09. 2022 |
| • வெளியீடு | : புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம் |
| • உரிமை | : வெளியீட்டாளருக்கு |
| • நூலின்அளவு | : 1/8 demi |
| • பக்கம் | : 318 |
| • தாள் | : மேப்லித்தோ N.S. - 70 G.S.M. |
| • மேல் அட்டை | : பல்வண்ண அட்டை - 300 G.S.M. |
| • மேல்அட்டை வடிவமைப்பு | : ஜெயக்குமார் |
| • நூல் வடிவமைப்பு | : க.சரவணன் |
| அச்சாக்கம் | : யோகி பதிப்பகம்.<br>65.,4வது குறுக்குத்தெரு, சக்திநகர்<br>புதுச்சேரி -13 பேசி : 99947 25888 |
| • ISBN No. | : 978-81-954810-3-3 |
| • விலை | : உருபாய் 500/- |

புதுவைத் தமிழ்நெஞ்சன்
30. துளிப்பா இலக்கியத் தளத்திற்கு வித்திட்ட புதுச்சேரி
கு.அ. தமிழ்மொழி
31. இல்லறத்தில் கிழவோள் மாண்புகள்
முனைவர் பொன். திலகவதி
32. தமிழர்களின் இல்லற மாண்புகள்
எழுத்தாளர் பா. தேவி
33. தமிழர்களின் அறங்களில் நெய்தற்கலி காட்டும்
நவமணிகள் - முனைவர் திருமதி வை.நம்பித்தாய்
34. பெண்ணறத்தில் தமிழரின் மாண்பு
முனைவர் சு.நாகவள்ளி
35. ஐங்குறுநூற்றில் பெண்களின் மாண்பு
ஜெ.நிஷா
36. சிற்பக்கலையில் தமிழனின் தொன்மை
திருமதி மு. பழனியம்மாள்
37. பெரியா புராணமும் அறநெறியும்
முனைவர். சீ. பிரேமகுமாரி
38. சுதந்திரப் போராட்ட வரலாற்றில் போற்றப்பட
வேண்டிய தமிழர்கள்: *M P* திருமலாச்சாரி &
சிந்தனை சிற்பி சிங்காரவேலர்
முனைவர் செ. பெரியாண்டி
39. புறநானூறு காட்டும் அதியமான் நெடுமான்
அஞ்சியின் வீரம் - ஜா. மாலா
40. வள்ளுவர் கூறும் வாழ்வும் மருத்துவமும்
முனைவர் அரங்க.மு.முருகையன்
41. தமிழர்தம் இல்லற விழுமியங்கள்
முனைவர் மு.மூர்த்தி
42. அரசியலில் தமிழனின் மாண்பு ஒரு சட்டநோக்கு
முனைவர். ப.மோகன்தாசு

# சிற்பக்கலையில் தமிழனின் தொன்மை

**திருமதி மு. பழனியம்மாள்**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை
தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
இலாசுப்பேட்டை, புதுச்சேரி – 605 008.



## முன்னுரை

கல், உலோகம், செங்கல், மரம் போன்றவற்றைக் கொண்டு, கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே சிற்பக்கலை எனப்படும். இக்கலை பண்டைக்காலம் முதற்கொண்டே தமிழரால் வளர்க்கப்பெற்ற விழுமியக் கலைகளுள் ஒன்றாகும். தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும் இச்சிற்பக்கலைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. சிற்பங்கள் செதுக்குவதையும், சிற்பங்களில் வெளிப்படும் அழகியலையும் மரபையும் நுட்பங்களையும் தமிழரின் சிற்பக்கலை அழகாக எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய சிறப்புமிக்க சிற்பக்கலைப் பற்றி ஆராய இக்கட்டுரை விழைகிறது.

## சிற்பிகள்

சிற்ப உருவங்களைச் செய்பவர்களுக்குப் பொதுவாகச் 'சிற்பி' என்ற பெயர் வழங்கினும் சிற்பம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பொருளுக்கேற்ப வேறுபட்ட பெயர்களைக் கொண்டிருந்தனர். மண்ணால் சிற்பம் செய்பவர் 'மண்ணீட்டாளர்' என்னும் பெயரையும் மரம், கல், உலோக வகைச் சிற்பம் செய்பவர்கள் 'கம்மியர்கள்' என்றும் சுதையினால் சிற்பம் செய்பவர் 'கொத்தர்' எனவும் பெயர் பெற்றிருந்தனர்.

சிற்பிகள் அழகியல் மற்றும் உடற்கூறு இலக்கணங்களைப் பயின்றவர்களாக இருந்தனர். சிற்பிகளுக்கென்று தனி இலக்கண நூல்களும் பயிற்சி முறைகளும் இருந்தன. 'மயன்' என்னும் தெய்வச்சிற்பி இருந்ததாகவும், அவன் பல அரிய சிற்பங்களை உருவாக்கியதாகவும், உயர்ந்த கட்டிடங்களை எழுப்பியதாகவும் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.